**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.1211/2024 நாள்- 27.02.2026

**வா.சா.1. கணேசன்**

## குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்

வழக்கிற்கான விவரங்களை நான்தான் என் வழக்கறிஞரிடம் கூறினேன். வழக்கில் கண்ட சொத்துக்களின் சர்வே எண்.312/3 ன் மொத்த விஸ்தீரணம் 87 செண்ட். அது எவ்வளவு உட்பிரிவு ஆகியுள்ளது என்று எனக்கு தெரியாது. பிராதில் எனது இடத்திற்கு மேற்கு பக்கம் ஆனந்தம்மாள் கிரைய மனை என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். ஆனந்தம்மாளிடம் இருந்து தான் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான். ஆனந்தம்மாளுக்கு எவ்வளவு சொத்து பாத்தியம் என்றும் எவ்வளவு சொத்தை கிரையம் பெறப்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது. மீனாட்சி சுந்தரத்திடமிருந்து 04.10.2004 அன்று மாயாண்டி கிரையம் வாங்கி, தங்ககுருவிற்கு கிரையம் கொடுத்து தங்ககுருவிடம் இருந்து நான் கிரையம் பெற்றதாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மீனாட்சி சுந்தரத்திடம் இருந்து மாயாண்டி கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தங்ககுரு, மீனாட்சி சுந்தரத்திடமிருந்து 1 .3/4 செண்ட் ஒரு சொத்து மட்டும் கிரையம் பெற்றுள்ளார். தங்ககுருவிடம் இருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தங்ககுரு மாயாண்டி நாடாரின் வாரிசுகளிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தின் அசல் என் வசம் ஒப்படைக்கவில்லை. கிரைய ஆவணத்தின் நகலில் 2 இன சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 வது அயிட்ட சொத்திற்கு பிளாட் எண் 54 என்றும் , பிளாட் எண் 55 என்று காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. தங்ககுருவிடம் இருந்து கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யப்படவில்லை நகல் எடுத்து தாக்கல் செய்துள்ளேன் அசலை தனி நபரிடம்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

அடமானம் வைத்துள்ளேன். தங்ககுரு வாங்கிய பத்திரத்தில் பிளாட் எண் காட்டாமல் எனது பத்திரத்தில் பிளாட் எண் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வரைபடத்தின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வரைபடத்தின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வரைபடம் ரெவின்யூ மற்றும் லேஅவுட் மூலம் பெற்றதா என்றால் என்னால் கூற இயலாது. என்னுடைய கிரைய பத்திரத்தில் கிழமேல் 34 அடி தென்வடல் 23 அடி என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதிலும் சொத்தின் மேற்கு மாலாக ஆனந்தம்மாள் கிரைய மனை என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி, வா.சா.ஆ.-3 ன் படி ஆனந்தம்மாளிடம் இருந்து 47 செண்ட் என காட்டி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி கிரையம் வாங்கிய காலத்திலேயே உட்பிரிவு செய்து 312/3A1 என காண்பித்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் கிழக்கு பக்கமும், தெற்கு பக்கமும் கண்ணாத்து வாய்க்கால் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் கிரைய பத்திரத்தில் கிழக்கு மாலாக சுந்தரகனி மற்றும் கிருஷ்ணசாமி நஞ்சை நிலம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி வாங்கிய 47 செண்ட் சொத்தில் மரம் செடிகள் நட்டு விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். 47 செண்டும் ஒரே காம்பவுண்டுக்குள் அமைந்துள்ளது என்றால் சரிதான். காம்பவுண்டுக்குள் என்னுடைய இடம் அமைந்துள்ளது. என்னுடைய இடம் காம்பவுண்டுக்குள் அமைந்துள்ளது என்பதை காட்டுவதற்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் வந்து இடத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளதை நான் படித்து பார்த்துள்ளேன். அந்த அறிக்கையில் பிரதிவாதியின் 47 செண்ட் நிலம் மட்டும் தான் காம்பவுண்டுக்குள் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். காம்பவுண்டு சுவருக்கு மேற்கு பக்கமாக 40 செண்ட் அமைந்துள்ளதாக ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த தங்ககுருவின் முன்பாத்தியஸ்தர்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

மாயாண்டிக்கு 87 செண்ட் தவிர வேறு இடம் கிடையாது என்றால் சரிதான். 87 செண்டிற்கும் லேஅவுட் எப்போது எந்த அதிகாரியால் வழங்கப்பட்டது என்று என் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய பெயருக்கு பட்டா மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எடுத்துள்ளேன் அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் செட் போட்டு மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதற்கு தனியாக கதவு எண் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி இடத்திற்கு தென்பக்கம் மூர்த்தி என்பவருக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது என்றும் அதற்கு தெற்கு பக்கம் தான் ரோடு உள்ளது என்றால் சரிதான் மேற்கு பக்கமும் தென்வடல் பாதை உள்ளது. அந்த பாதைக்கு அடுத்தாற்போல் மேற்கு பக்கம் முத்து விஜயன் வீடு உள்ளது என்றால் சரிதான் தென்வடல் பாதைக்கு வடமேற்கு பகுதியில் அன்புசெல்வி ஆதித்தயன் காலிமனை உள்ளதா என்றால் யார் இடம் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 47 செண்ட் கிரையம் வாங்கிய காலத்திலிருந்து அனுபவம் செய்து வருகிறார் என்றும் நான் சொல்வது போன்று என்னுடைய சொத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும் பிரதிவாதி இடத்திற்குள் என் சொத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் நான் கோரும் பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றும் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி பெயரில் தான் 47 செண்டிற்கான பட்டா அமைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.